# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
மார்கழி 27
முஹர்ரம் 30
புதன் (11-1-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 62
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35


# தமிழ் மக்கள் மீது சிங்களத்தைத் திணிக்கும் கல்வியமைச்சருக்கு கறுப்புக்கொடி!

## வெளிநாடுகளிலுள்ள தமிழர் இயக்கங்கள் முடிவு!


மும்மொழித் திட்டம் என்ற போர்வையின்கீழ் தமிழ் மக்களின் தொண்டைக்குள் ஏகாதிபத்திய சிங்களத்தை திணிக்கும் நோக்குடன் 1978 சனவரி முதல் தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களப் போதனைக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏகாதிபத்தியமொழியை தமிழ் மாணவர்களின் தொண்டைக்குள் திணிக்கும் முயற்சியிலீடுபட்டுள்ள கல்வியமைச்சர் வெளிநாடுகளுக்கு செல்லும் போது ஆங்காங்கு அவருக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவதென வெளிநாடுகளிலுள்ள தமிழர் இயக்கங்கள் முடிவுசெய்துள்ளன.

தமிழ் மொழியும் சிங்கள மொழியுடன் சரிசம அந்தஸ்துள்ள ஆட்சிமொழியாக்கப்பட்டு தமிழ் இனம் தன்னைத் தானே ஆளுகின்ற நிலையை அடைகின்ற வரை — சிங்களத்தை தமிழ்ப்பாடசாலைகளில் போதிப்பதை தமிழர் விடுதலைக்கூட்டணி பா.உக்கள் தேசிய அரசுப் பேரவையில் கடுமையாக ஆட்சேபித்திருந்ததும் அதையெல்லாம் புறக்கணித்து விட்டு கல்வியமைச்சர் தமிழ் ஈழத்திலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு சிங்களம் பயிற்றுவிப்பதற்கு ஆசிரியர்களை அனுப்பியுள்ளார்.

1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் வருவதற்கு முன்னர் சிங்களத்தை ஒரு பாடமாகப் படித்து வந்த தமிழ் மக்கள், அந்த ஏகாதிபத்திய பாஸிஸ சட்டம் தமிழ் மக்களின் எதிர்ப்பின் மத்தியில் நிறைவேறியதைத் தொடர்ந்து அண்மையில் காலஞ் சென்ற அறிஞர் ஹண்டி பேரின்பநாயகம் போன்றோரின் ஆலோசனையின்பேரில் கடந்த 22 ஆண்டுகளாக சிங்களத் திணிப்பை மும்முரமாக எதிர்த்துப்

—4-ம் பக்கம் பார்க்க

# தலைமகனுக்கு நினைவாலயம் தமிழினமே! எழுக!



பொங்கல் திருநாள் — தை முதல் நாள் — தமிழர் நெஞ்சிலே புத்துணர்ச்சியூட்டும்நாள் — புதுமைச் சிந்தனைகள் மலரும் நாள் — புதிய தெம்பும் வேகமும் பிறக்கும் நாள் — புன்மை இருட்கணம் மறையும் நாள்!

ஆகஸ்டில் சிந்திய செவ்விரத்தம் இன்னும் காயவில்லை; மஞ்சளும் குங்குமமும் பூவும் பொட்டும் அழிக்கப்பட்ட நம் குலப்பெண்டிரின் கண்களிலிருந்து அருவியென வழிந்தோடும் கண்ணீர் இன்னும் நிற்கவில்லை; தமிழினத்தின் இதயப்புண் ஆறவில்லை; அகதிகளாக்கப்பட்டு நடுத்தெருவில் நிற்கும் தமிழர்களின் துன்பம் தீரவில்லை — இந்நிலையில் எதிர்வரும் பொங்கலன்று நமக்கு மகிழ்வேது — விழாவேது — கொண்டாட்டமேது என்று எண்ணியிருந்தேன்!

ஆனால் — அதே நாளில்தான் நமக்கெல்லாம் தெம்பூட்டக்கூடிய — ஓர் பெரும்பணி யாழ்நகரில் தொடங்கவிருக்கிறது என்கிற செய்தி தேனாக வந்து காதில் விழுந்து இனித்திட்டபோது — பயன்தரு நாளாக எதிர்வரும் பொங்கல் திருநாள் பூத்திட இருப்பதை எண்ணிக் களிப்புற்றேன்.

ஆம், எந்தத் தலைவன் நம்நெஞ்செல்லாம் நிறைந்து நம்மை இயக்கிக்கொண்டிருக்கிறானோ — எந்தத் தலைவன் நம் குருதி அணு ஒவ்வொன்றிலும் நிறைந்து நமக்கு வேகத்தையும் வீரத்தையும் தந்துகொண்டிருக்கிறானோ — அந்தத் தலைவனுக்கு நினைவாலயம் எழுப்பிட யாழ்நகரில் கால்கோளிடப்படுகிறது பொங்கல் திருநாளன்று!

எந்தத் தலைவன் — தமிழினத்தைத் தட்டியெழுப்பி, தமிழனுக்கு எழுச்சியூட்டி, தமிழ் சமுதாயத்தை சிந்திக்கவைத்து, அடிமைச் சிந்தனையை துடைத்தெறிந்து, விடுதலை வேட்கையை வளர்த்து — அந்தப் பாதையிலே முப்பது ஆண்டுகளாக தமிழ் மக்களை சிந்தாமல் சிதறாமல் வழிநடத்திவந்து — சுதந்திரத்தமிழ் ஈழம் என்ற இலட்சியத்துக்கு கால்கோளிட்டு மறைந்தானோ — அந்தத்தலைவனுக்கு — தமிழினத்தின் தன்மானச் சுரங்கத்துக்கு — தனிப்பெரும் சக்தியாய் தமிழினத்தை தாங்கி நின்ற தமிழ்ஈழத் தந்தைக்கு — மூதறிஞர் தந்தை செல்வாவுக்கு நினைவாலயம் எழுப்பிட யாழ்ப்பாணத் திருநகரில் கால்கோளிடப்படுகிறது பொங்கல் புதுநாளில்!

எந்த மண்ணின் விடுதலைக்காக அந்தக் கிழச்சிங்கம் தன் வாழ்நாளெல்லாம் உறுதி குலையாமல் போராடிவந்ததோ — எந்த மண்ணில் தன் காலடி பதித்து கடமையிலீடுபட்டு வந்ததோ — எந்த மண்ணோடு தன்னையும் சங்கமமாக்கி அந்த மண்ணையே புனிதப்படுத்தி வைத்ததோ — அதே தமிழ்ஈழ மண்ணில் — நானூறு ஆண்டுகளுக்குமுன் கொடியும்முடியும் படையும் கொற்றமும் கொண்டு தமிழன் தன்னைத்தானே ஆண்டிருந்த இத்திரு மண்ணில் அதே நிலையை மீண்டும் கண்டிடவேண்டும்; தமிழன் தன்னைத்தானே ஆண்டிடவேண்டும் என்று இறுதி மூச்சுள்ளவரை போராடி வந்த அந்தக் கிழச்சிங்கத்தின் நினைவாலயத்துக்கு அடிக்கல் நாட்டப்படுகிறது — பொங்கல் புதுநாளில்!

தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்பாழ்பட்டு நின்ற பழந்தமிழ் ஈழ நாட்டை வாழ்விக்க வந்த ஈழத்து மகாத்மாவுக்கு — அடிமை நிலை துடைத்தெறிய நம்மிடையே வாராது வந்துதித்த மாமணிக்கு — நினைவாலயம் எழ விருக்கிறது யாழ்நாரில் — அதற்கு பணி தொடங்குகிறது பொங்கலன்று!

சாதிவெறி போக்கி — சமதர்ம உணர்வூட்டி மோதி நின்ற தமிழர்களை மேதினியில் ஒன்றுக்கி — மாநிலப் பிரிவினை நீக்கி — ஒரு நாட்டினமாக தமிழினத்தை ஆக்கிவைத்து — தமிழரசுத் தந்தையாய் உருவெடுத்து — தமிழீழத் தந்தையாய் மலர்ந்து மணம் வீசியபடி இருக்கும் ஒப்பற்ற மாமணியாம் நம் தந்தை செல்வாவின் நினைவாலயம் நெஞ்சு நிமிர்த்திக் கொண்டு எழ விருக்கிறது யாழ்நகரில்.

எண்பது வயதுவரை போர்க்களத்தில் நின்ற பொன்னவிர் மேனிப் பெரியவரின் நினைவாக எழவிருக்கின்ற எண்பது அடிக்கோபுரத்

## பொங்கலன்று வருக! அலைகடலெனத் திரள்க!

துக்கு தைத்திருநாளன்று அடிக்கல் நாட்டுகிறார் — தமிழர் விடுதலைக்கூட்டணியின் 'வசிஷ்ட'ரும் ஈழத்தின் ஈடிணையற்ற அறிஞரும் — காந்தீய வாழ்வு நடத்துபவருமான பேராசிரியர் நேசையா அவர்கள்.

திராவிடக் கலையின் ஒளிவீசும் படியாக நினைவாலய அமைப்புப்படத்தை ஆக்கித்தந்து அதை நிர்மாணித்துத்தரவிருக்கிறார் ஈழத்தின் பெருமதிப்புக்குரியவரும் உலகப் புகழ்பெற்றவருமான நமது கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராசா அவர்கள்!

நினைவாலயத்தை கட்டி முடித்திடவும் ஏனையபணிகளுக்கும் பத்து இலட்சம் ரூபா வேண்டுமென்கிறார் நமது சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள்!

தம்முடைய நேரம், நினைப்பு, செல்வம், அனைத்தையுமே தமிழினத்துக்காக அர்ப்பணித்த தங்கத்தலைவனுக்கு நினைவாலயம் நிறுவிட பத்து இலட்சம் ரூபாவையா தமிழ்மக்கள் தரமாட்டார்கள்? அந்த அளவுக்கு தமிழினம் நன்றி கெட்ட இனமாக இருக்குமென்று நான் நினைக்கவில்லை!

35 இலட்சம் தமிழ் பேசும் மக்களில் ஒரு பத்து இலட்சம் பேர் ஆளுக்கு ஒரு ரூபா கொடுத்தால் கூட குறிப்பிட்ட தொகை வந்துவிடுமே!

எனவே வாரிவழங்குங்கள் தந்தை செல்வா நினைவாலய நிதிக்கு!

தந்தை செல்வா நினைவாலயம் எழுப்புவது ஏதோ நாம் அவருக்காக செய்கின்ற காரியமன்று நமக்காக, நமது வருங்காலச் சந்ததிக்காகவே செல்வா நினைவாலயம் உருவாகப் போகிறது!

ஏனெனில் தந்தை செல்வா அவர்கள், தமிழர் வாழ்வில் மறக்க முடியாத ஒரு சகாப்தம்; ஒரு சாகாத சரித்திரம், ஒரு பெரிய திருப்பம்; இன்னும் ஒரு நூறு ஆண்டுகளுக்காவது அவரது நினைவும், அவர் தந்துவிட்டு சென்ற சிந்தனைகளுமே தமிழினத்தை வழிநடத்தவிருக்கின்றன!

எனவே பொங்கல் நாளன்று காலையில் புனலாடி பொங்கல் முடித்த பின்னர் அன்று மாலை 4 மணிக்கு தந்தை செல்வாவின் சந்தனவுடல் சந்தனக்கட்டைமீது சாம்பரான இடம் நோக்கி வந்திடுவீர்! அந்த இடத்திலேயே தான் அடிக்கல் நாட்டப்படுகிறது!

அனைவரும் வருக! அலைகடலெனவருக! தந்தை செல்வா தந்து விட்டுச்சென்ற உணர்வுகளை நெஞ்சிலே தேக்கி வருக! தமிழ்த்தாயின் திரு. மகனுக்கு — தமிழீழத் தலைவனுக்கு — தங்க மேனிகொண்ட சிங்கத் தலைவனுக்கு நினைவாலயம் எழுப்பிட தங்கமும் பொன்னும் பொருளும் பணமுமாக அள்ளி வழங்கிடுக!

கோவை-மகேசன்

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர் இரட்டை வேடம் போடுகிறாரா? ஜே. ஆர். சொற்படி அவர் ஆடுகிறாரா?

"அமிரின் இரட்டை வேடம்." என்ற தலைப்பின் கீழ் 8-12-77 "வீரகேசரி" நாழிதளில் நான்காம் பக்கத்தில் ஒரு செய்தி பிரசுரமாகியுள்ளது. இச் செய்தியில், "பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவுடன் திரு. அமிர்தலிங்கம் கொழும்பில் மறைமுகமாக ஒத்துழைத்து அவர் சொற்படி நடந்து வருகிறார். அதேசமயம் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகப போர்க்குரல் எழுப்புகிறார். இந்த இரட்டை வேடத்தினால் தமிழ்மக்களை ஏமாற்றி அரசியல் லாபம் பெறும் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது." எனச் சீனச் சாரபுக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கவாதியான திரு. செந்திவேல் கூறியுள்ளதாக உள்ளது.

இலட்சோபலட்சம் தமிழ் பேசும் மக்களின் மதிப்பிற்குரிய மாபெரும் தலைவரும், இலங்கையின் அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவனாக முதன் முதலாக வந்த தமிழன் என்ற சாதனையை நிலைநாட்டிய, திரு. அமிர்தலிங்கம் மீது அப்பட்டமான பழியைச் சுமத்தும் செந்திவேல் போன்ற அரசியல் சூனியங்களுக்குப் பதில்கூறாமல எந்தத் தன்மானமுள்ள தமிழனாலும் இருக்க முடியாது. திரு. ஜே. ஆர். ஜெயவர்தன அவர்கள் எந்த மாயவலையை வீசினாலும் திரு. அமிர்தலிங்கம் அதில் அகப்படமாட்டார். பிரதமர் அவர்கள் பொறிவைத்துப் பிடிக்க திரு. அமிர்தலிங்கம் எலியுமல்ல.

சீனத் தலைவர்களின் சொற்படி கேட்டு நடந்து பழக்கப்பட்ட செந்திவேல் போன்றவர்களுக்கு, சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றும் அமிர்தலிங்கம் போன்றோரும் தம்மைப் போன்றவர்கள் தான், என எண்ணுவதில் வியப்பில்லை. தேசிய அரசுப் பேரவையில் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் நிகழ்த்தும் சொற்பொழிவுகள், பிரதமரின் சொற்படியா நிகழ்த்தப் படுகின்றன?

திரு. அமிர்தலிங்கம் 'இரட்டை வேடம்' போட்டுத் தான் இருக்கின்றார். தமிழர் விடுதலைக் கூட்டணியின், பாராளுமன்றக் குழுவின் தலைவா, எதிர்க்கட்சித்தலைவர் என்பவைதாம் அந்த இரட்டை வேடம்.

தேர்தல் காலத்தில் தமிழ் பேசும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற திரு. அமிர்தலிங்கம் பகிரங்கமாகவே பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறார். தமிழ் பேசும் மக்களின் ஆணைப்படி அவர் நடப்பாரேயல்லாது, திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவின் சொற்படியோ, அல்லது வேறொருவரின் சொற்படியோ அவர் நடக்கமாட்டார். திரைமறைவில் சீனச் சார்புக் கம்யூனிஸ்டுக்களைப் போல அரசியல் நாடகமாடுவதற்குத் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் எவரிடமிருந்தும் பயிற்சி பெற்றிருக்கவில்லை. தந்தை செல்வாவின் பாசறையிற் பயிற்சிபெற்ற பத்தரை மாற்றுத் தங்கந் தான் அமிர்தலிங்கம், இதன் காரணமாகவே இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் தமது தானைத்தலைவனாக, தளபதியாக, செயலாற்றும் செயலதிபர்களில் ஒருவராக அமிர்தலிங்கம் அவர்களை ஏற்றுக்கொண்டார்கள்.

தமக்கு அரசியல் லாபம் தேடும் அரசியல் வியாபாரம் செய்வதில் திரு: அமிர்தலிங்கம் ஈடுபட்டிருக்கவில்லை, சென்சீனாவுக்காக இலங்கையில் அரசியல் வியாபாரம் செய்து வருகிறவர்களுக்கு ஏனையோரும் தம்மைப் போன்றவர்களே என்று சிவப்புக் கண்ணாடிமூலம் பார்க்கும்போது தோன்றக் கூடும்!

ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர், அந்நாட்டின் பிரதமருடன் பல சந்தர்ப்பங்களில் நெருங்கிப் பழக வேண்டிய நிலை ஏற்படுவதுண்டு. மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவர்களுடனும் பண்புடன் பழகுவதே சனநாயக மரபாகும். இதனால் எவரும் தமது கொள்கையை விட்டுக்கொடுத்து விடுவதில்லை. எதிர்க்கட்சியென்றால் என்னவென்று தெரியாத சர்வாதிகார ஆட்சியில் நம்பிக்கையுள்ள சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இது எங்கே விளங்கப் போகிறது?

அதே கூட்டத்தில் திரு. செந்திவேல் அவர்கள், "திரு. அமிர்தலிங்கத்திற்கும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. வி. பொன்னம்பலத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள நட்புறவு விசனிக்கத்தக்கது. இதனால் தமிழ் மக்கள் எவ்வித நன்மையும் அடைய முடியாது" எனக் கூறியதாக அதே செய்தியில் உள்ளது. இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் மொழி, நிலம், கலாச்சாரம் ஆகியவற்றைப் பேணுவதற்காகவே, தோழர் வி. பொன்னம்பலம் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஒத்துழைத்து வருகிறார். இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டுமெனத் தோழர் வி. பொன்னம்பலம் பகிரங்கமாகவே கூறிவருகிறார். இது அவரின் அரசியல் அறிவின் ஆழத்தையும், அனுபவ முதிர்ச்சியையும், பரந்த மனப்பான்மையையும் காட்டுகின்றது.

சீனச்சார்புக் கம்யூனிஸ்டுகள் சிவப்புக் கொடியைக் காட்டினாலும் திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது; அல்லது தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி இயக்கத்தினரால் நடாத்தப்படும் இயக்கத்தின் வேகம் குறையப்போவதுமில்லை, நிற்கப் போவதுமில்லை.

—ம. சத்திய மூர்த்தி

தென்புலோலியூர்
புலோலி.

## லீவர் பிறதேர்சிலும் தமிழ் ஒதுக்கல்

தமிழ் மக்களிடை தம் உற்பத்திகளை விற்று பணமாக்கும் 'லீவர் பிறதேர்ஸ்' தன்னுடைய லீவர் குடும்பம் (Lever Family) என்னும் சஞ்சிகையை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டு வைத்ததின் மூலம் தானும் வெறிபிடித்த நிறுவனம் தான் என்பதை வெளிப் படுத்தி விட்டது.

## 'சிட்' முறைபோய் 'லிஸ்ட்' முறை வந்தது

கடந்த அரசில் உத்தியோக நியமனங்களுக்கு கடைபிடிக்கப்பட்டு வந்த அரசு எம். பி. க்களினதும், ஆட்சி அமைப்பாளர்களினது 'சிட்'முறை இந்த அரசில் 'லிஸ்ட்'முறை என்னும் புதிய பெயரில் அமுலுக்கு வந்துள்ளது.

தற்போது எம்.பிக்களுக்கு ஒரு 'லிஸ்ட்' அனுப்பப்படும் அதில் உள்ள பெயர்களில் சிலவற்றை எம். பி, சிபார்சு செய்வாரென தெரிய வருகிறது.

இதில் பச்சை வகுப்புவாதம்கடைப்பிடிக்கப்பட்டு சிங்கள பகுதிகளை போல் அரை மடங்கு ஆட்களுக்கே தமிழ்ப் பகுதியில் நியமனம் வழங்கவென சிபார்சு செய்யும்படி எம், பிக்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

மேலும் இந்த 'லிஸ்ட்'பட்டியல்கள் பச்சைகளின் இச்சைகளுக்கு ஏற்ப தயாரிக்கப் படுவதாகவும் அமைப்பாளர்களின் ஆலோசனைகள் இதற்கு பெறப்படுவதாகவும் தெரியவருகிறது.

பழைய சேலைகட்சியே வேட்டி வடிவில் மீளவும் வந் [illegible] கொள்கின்றனர்.

## தமிழ் மாணவர்களுக்கு கதவடைப்பு

கொழும்பில் பிரதானமான கல்விக்கூடங்களில் ஒன்றாகவிளங்குவதும், உடுப்பிட்டி நாடாளுமன்ற உறுப்பினர், கல்வி ஊட்டிய பாடசாலையுமாகிய அர்ச். சூசையப்பர் கல்லூரி (St. Josehp's Collage) யில் இன்று தமிழ் பேசும் (5 வயதிற்கு மேற்பட்ட) பிள்ளைகளுக்கு கதவடைப்பு செய்யப்பட்டுள்ளது இவ்வாண்டு 5 வயது பிள்ளைகளின் பிரவேசத்திற்கு கதவடைப்பு, அடுத்த ஆண்டு எதற்கோ?

கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக, அர்ச் சூசையப்பர் கல்லூரி பாலர் பகுதியில் கல்விகற்ற, தமிழ் மாணவர்களுக்கு, கல்லூரியில் முதலாம்தர பிரவேசம் மறுக்கப்பட்டதோடு, மூடுவிழாவும் நடத்தப்பட்டுள்ளது. முதலாம் வகுப்பு தமிழ்பிள்ளைகட்கு பிரவேசம் மறுக்கப்பட்ட அதே வேளை 6 சிங்கள வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சிங்கள வெறிபிடித்த கிறிஸ்தவ பாதிரியாரின் ஆதிக்கம் தமிழ் மாணவர்களுக்கு கதவடைப்பு செய்துள்ளது.

தமிழர்கள் தாக்குண்டு, அல்லோல கல்லோலப்பட்ட காலப்பகுதியில் விண்ணப்பங்கள் கோரி இக்கால பகுதியிலேயே இறுதி தினத்தைக் குறிப்பிட்டு தமிழர்களுக்கு விண்ணப்பம் அனுப்ப முடியாத நிலைக்கு உட்படுத்தி தமிழ்பகுதிக்கு கதவடைப்பு செய்தனர். இனிவருங்காலங்களில் எதை செய்ய உள்ளனரோ? இதன் காரணமாக அங்கு படித்த தமிழ்பிள்ளைகளின் நிலைமை இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளது. எனவே தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவர்கள், கல்வி மந்திரியின் கவனத்திற்கு இதனைகொண்டு வந்து தமிழ் மக்களுக்கு ஒரு பரிகாரம் கிடைக்க வழி செய்வார்களா என தமிழ் பேசும் கொழும்பு மக்கள் ஏங்குகின்றனர்.

இதேநிலை கொழும்பு டி. எஸ். சேனநாயக்கா மகா வித்தியாலயத்திலும் 1-12-1977ல் நடந்துள்ளது. 500க்கும் மேற்பட்ட சிங்களம் பேசும் 5வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு இடம் அளித்துள்ள அதே வேளை, ஏறக்குறைய 60 தமிழ் பேசும் பிள்ளைகளுக்கே அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. இது எவ்வகையான தரப்படுத்தல் முறையோ! சர்வகலாசாலையில், தரப்படுதலை ஒழித்து விட்டோம்என கூறி வரும் இவ்வரசாங்கம் இதை மற்றைய பாடசாலைகள், கல்லூரிகளில், மறைமுகமாக கடைப்பிடிப்பதை தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் அறிய வேண்டும் டி. எஸ். சேனநாயக்க மகா வித்தியாலயத்தில், அனுமதி மறுக்கப்பட்ட பிள்ளைகளின் எதிர்காலம் என்ன?

## தை பத்தில்...!

ஆடை அவிழ்ந்திட அரிவையர் ஓடிய
அவலம் மறந்தனையோ?— ஒன்பது
பாடையில் ஊர்ந்த பைந்தமிழ் மறவர்
பாவம் மறந்தனையோ?

காடையர் சாடிட களமதில் ஓடிய
குருதிமறந்தனையோ?— உன்னை
பேடையன் என்று பெரியவர் சொல்ல
பெரும்பழி கொண்டனையோ?

குண்டாந்தடியுடன் குண்டர்களாடிய
கோரம் மறந்தனையோ?—கண்ணீர்
குண்டு வெடித்திட குழந்தைகள் திணறிய
கோலம் மறந்தனையோ?

குண்டு முழங்கிட கோவென்றலறிய
கூக்குரல் மறந்தனையோ?—எங்கள்
பெண்டுகள் பிள்ளைகள் பெரியவர் அங்கம்
பிய்ந்தது மறந்தனையோ?

அன்று நடந்தது அது வெறும் கனவென
அட நீ எண்ணினையோ?—அது
இன்று நடப்பது என்றும் நடந்திடும்
எழுந்திடு கண்திறவாய்.

தண்டமிழ் சுவைத்த தமிழர் தவித்த
துன்பம் நினைத்திடடா!—சொந்த
மண்டலங்காணு மறவனே அன்றேல்
மண்ணிடை மடிந்திடடா!

—நாவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து: "அப்பன் மாண்டால் தெரியும் அப்பன் அருமை என்று" ஒரு பழமொழி இருக்கு உனக்குத் தெரிமோ?

கந்தன்: ஏன் தெரியாமல் திடீரெண்டு இந்தப் பழமொழியை ஏன் சொல்லுறியள்,

முத்து; தமிழன் இல்லாமல் தாங்கள் வாழுறது முடியாதகாரியம் எண்டு இப்ப எங்கட சிங்களவர்கள் உணரத் தொடங்கிற்றினம்; தமிழ் தோட்டத் தொழிலாளர்போல சிங்களவர்கள் உழைப்பில் ஊக்கம் காட்டினம். இல்லை என்று தோட்டக் கைத்தொழில் மந்திரி எம். டீ. எச். ஜயவர்த்தனு சொல்லியிருக்கிறுர்.

கந்தன்! தோட்டத் தொழிலாளர்கள் என்ன, கலமபகத்தில எங்கட டாக்குத்தர்மார் தமிழ்ப்பகுதிக்கு வந்தப்புறகு உதுகள் நாறினகதையும் தெரியும்தானே.

முத்து: இப்பிடிப்பட்ட இவையளிட ஏலாத நிலையில விழுந்தும் மீசையில மண் ஒட்டாத காரியமாக அவையள் என்ன செல்லித்திரியினம் தெரியுமே.

கந்தன்! என்ன;

முத்து: தமிழர்கள் பிரிந்து சென்ருல் தமிழர்கள் தான் கஸ்டப்படுவினமாம் இப்பதெரியுதுதானே ஒரு இனக்கலவரத்தோட தமிழர் கொஞ்சப்பேர் இஞ்சால வந்ததும் என்ன நடக்குதெண்டு, அவையளே வாய் விட்டுச் சொல்லுற அளவுக்கு தமிழனுடைய உழைப்பும் அந்த ஆளும் சிங்களவங்களிட சோம்பேறித்தனமும் இருக்குது என்று.

கந்தன்: இதால தான் அகதிகளாக எங்கட பகுதிகளுக்கு வந்தவையளை திரும்பவும வாங்கோ, வாங்கோ என்று கூப்பிடினம் போல;

முத்து! தம்பி, தமிழனுடைய உழைப்பும், மூளையும் இல்லாமல் சிங்களநாடு வாழ ஏலாத நிலையிருக்கிற போது ஏன் நாங்கள் எங்கட நாட்டை அமைச்சு அவங்களுக்கு நிகராக அவங்களிலும் மேலாக வாழ முடியாது? ஒருவேளை அப்பிடி தமிழ் அரசு உருவானுல் பிறகு தாங்கள் நிம்மதியாய் வாழ முடியாது என்ற பயந்தான் உவையளுக்கு.

கந்தன்; அப்ப, இந்தச் சிங்கள ஆட்சியை எங்கட வழிக்குக் கொண்டு வாறதுக்கு சிங்களத்தலைவர்கள் நினைக்கிறமாதிரி துட்டகைமுனு, எல்லாளன் யுத்தம் தேவையில்லை தமிழர்கள் எல்லாரும் தமிழ் பகுதிகளுக்கு குடியேறினுலே போதும் போல இருக்கே.

முத்து! தம்பி தமிழர்கள் இந்தப் பகுதிக்கு குடியேற வரமுந்தி இதுவரையில நம்ம பகுதிகளுக்கு வந்திருக்கிற மலைநாட்டுத் தமிழர்கள் இனிமேல் மலைநாட்டுப் பகுதிகளை நினைக்காதபடிக்கு அவங்களுக்கு வாழ்க்கையை அமைச்சுக் கொடுத்து மீதமிருக்கிற தமிழர்களையும் இங்க வர வைக்கவேணும் அப்போ, போராடிப் பெற நினைக்கிற தமிழீழம் தானுக உருவாகிடும் இல்லையா?

# கலாசாரம் அழிந்தால் இனம் அழியும்!

## தமிழ் கலாசாரத்தை பாதுகாப்போம்

எந்த ஒரு இனத்தின் மீதும் தனது ஆதிக்கத்தை திணிக்க விரும்பும் பிறிதொரு இனம், அவ்வினத்தின் அடிப்படை கலாசார வாழ்வினை சிதைத்து சமூக நிலையில் குழப்பம் உண்டுபண்ணி தான் விரும்பிய ஆட்சி முறையையும், கலச்சாரவாழ்க்கை முறையினையும் நிறுவுவது இயல்பானதாகும். இலங்கையிலும் இந்தியாவிலும் இவ்வகையிலேயே ஆங்கிலேயேர் தம் ஏகாதிபத்தியத்தை நிறுவினர். இதற்கிணங்கவே ஆங்கிலேயர் தம்மதத்தையும் மொழியையும் சுதேசிகளிடம் பலவந்தமாகவோ அன்றி தயவாகவோ புகுத்தினர். சுதேசிகளில் ஒரு சில சுயநலவிரும்பிகளின் துணையுடன் இப்பணிகள் நிறைவேற்றப்பட்டன.

இவ்வகையான ஏகாதிபத்தியங்களை எதிர்ப்பவர்கள் குலைக்கப்படும் சமூக முறையினை கட்டிக்காக்க முற்படுவதும் இயற்கையே. அன்றியும் அதுவே அவர்களின் முதற் கடமையாகும்.

இவைகளுக்கேற்பவே தமிழரை அடிமைப்படுத்திவரும் சிங்கள ஏகாதிபத்தியம் தமிழர்பண்பாட்டையும், காலாசாரத்தையும் அழித்து வருகின்றது, அதே வேகத்தில் தமது கலாசாரத்தையும் மொழியையும் தமிழரினுள் பலாத்காரமாக புகுத்தி வருகின்றது. இத்தகைய ஈனச் செயலகளுக்கு தமிழ் இனத்தின் ஒரு சில சுயநலமிகளும் துணைநிற்கின்றுர்களே.

அந்நியஆதிக்கம் ஏற்பட்ட நாட்தொட்டு அதற்கு ஆதரவாக அதன் பாதம் தழுவி நின்ற ''நம்மவரும்'', அதன் அரசியல் கலாச்சார ஆதிக்கத்தை எதிர்த்த நம்மவரும் ஏககாலத்தில் தொடர்ந்தே வந்துள்ளனர், இவ்விரு சக்திகளுக்கிடையிலான போராட்டத்தின் முடிவுகளிலேயே நம்மினத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் தங்கியிருந்துள்ளது.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்தவனின் தாய் பூமியிலேயே தமிழ் என்னும் சொல்லின் எதிர்காலம் கேள்விக்குறியாய் நிற்கின்றதெனின் அவைகளுக்கான முழுப்பொறுப்பும் அந்த சில 'நம்மவர்' வரிசையையே சாரும்.

ஏற்கனவே தமிழ் மொழியினுள் பலவழிகளில் சிங்கள சொற்கள் புகுந்து விட்டன. தென்னிலங்கையில் ஒரு சில சிங்களபிரதேசங்களில் வசிக்கும் தமிழர்களின் எண்ணிக்கை கணிசமாக இருந்தும் தமிழ் பாடசாலைகள் இல்லாததால் மறைமுகமாக சிங்கள பாடசாலைகளில் சிங்களம் கற்க தூண்டப்பட்டு காலகதியில் சிங்களவராக மாற்றப்படுகின்றனர். பகிரங்க இனமாற்றமே இது. இவ்விஞடியிலேயே பல்லாயிரமாஞேர் மத்தியில் இது நடைபெறுகிறது.

அதே வேளை வடகிழக்கு பகுதிகளில் மிகவும்குறைந்த விகிதத்தில் வாழும் சிங்களவர்க்காகவெனினும் சிங்கள மகா வித்தியாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தனிச்சிங்கள ஆட்சி மொழியால் நடைபெறும் மறைமுக தீமைகள் பிரசித்தம். அரசமதம் எனும் பெயரில் பௌத்தத்திற்கு கிடைக்கும் சலுகைகளில் ஒரு விகிதமாகிலும் ஏனைய மதங்களுக்கு கிடைப்பதில்லை, அத்துடன் தமிழ் கடவுள் முருகதலமான கதிர்காமம் அது அமைந்துள்ள நிலயத்தின் காரணமாக நாளுக்கு நாள் பௌத்த தலமாக மாற்றப்பட்டு வருகின்றது. இதற்கமைய அங்குள்ள இராமகிருஷ்ண மிஷன் போன்ற சைவபிரச்சார தாபனங்கள் அகற்றப்பட்டுள்ளன.

இந்திய மாநிலங்கள் மொழியால் வேறுபடினும் மதத்தால் ஒன்றுபட்டுள்ளதாலேயே அவற்றின் பொது கலாசாரம் என்னும் பெயரில் இருக்கின்றது, ஆனுல் இலங்கையில் தமிழ் சிங்கள இனங்கள் மொழி மதம் இரண்டிலுமே வேறுபட்டுள்ளதால்" இலங்கை கலாச்சாரம்" என்னும் வார்த்தைகளுக்கு இங்கு தனியொரு அர்த்தமே கிடையாது இவ்வகையான நாடுகளில் அநேகமாக சிறுபான்மை இனத்தின் சமூக கலாச்சார அமைப்பை பெரும்பான்மை இனம் விழித்துக் கொள்ளுமாயின் நிலைமையில் மாறுபாடுகள் ஏற்படலாம்.

எனவே இவ்வகையான இனங்களில் அரசியலை விடுத்து வெறும் கலாசாரத்தின் பாதுகாவலர்களே இறுதியில் தம்மினத்தின் அரசியல் விடுதலைக்காக போராட தொடங்கிவிடுவர். ஏனெனில் பூரண அரசியல் விடுதலையற்று பெரும்பான்மையினரின் அனுமதியுடன் தம் இனகலாச்சாரத்தை(மொழி மதம்) வளர்க்க முடியாமையேயாம், அதாவது ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு பெரும்பான்மையினர் வெளிக்கு வேறுவகையாக காட்டிக்கொண்டாலும் உள்ளார்த்தமாக சிறுபான்மையினரின் கலாச்சார அமைப்பை தகர்ப்பதிலேயே கண்ணுயிருப்பர். ஒரு இனத்தின் சமூக கலாச்சாரத்தை வளர்த்துக்கொண்டே அவ்வினத்தின்மீது ஆதிக்கம் செலுத்த நினைப்பது முடியதகாரியமாகும்.

எனவே இன்றைய நிலைமையில் நம்முன்னுள்ளமுதற் கடமை எமது "கல் தோன்றி மண் தோன்ரு காலத்தே முன் தோன்றிய மூத்த குடி" யின் பாரம்பரிய தொன்மை மிக்க கலாச்சாரத்தை பாதுகாப்பதேயாகும்; இல்லையெனில் ஒரு காலத்தில் இனமிருக்க நாடு இல்லை என்னும் நிலை உருவாகிவிடலாம்.

—ராஜன்பாபு

---

# உலக மொழிகளில்

## தமிழீழ விடுதலை இலக்கியங்கள்!

நமீபியாவுக்கு தென்னுபிரிக்க வெள்ளையர் ஆட்சி சுதந்திரம் வழங்கவேண்டுமெனவற்புறுத்திவரும் உலக நாடுகள் யாவும் அதே போன்று தமிழ் ஈழத்துக்கும் சிறீலங்கா சுதந்திரம் வழங்க வேண்டுமென்று வற்புறுத்தத் தலைப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

அந்த நாளைத் துரிதப்படுத்தும் நோக்கமாக லண்டனில் இயங்கும் தமிழ் விடுதலை இயக்கங்களுக்குள் ஒன்ருன ஈழவிடுதலை இயக்கம்தான் வெளியிடும் பிரசுரங்களை உலகமொழிகளான பிரஞ்சு, ஸ்பானிய, ஜெர்மன் மற்றும் அரபுமொழிகளிலும் வெளியிட ஆரம்பித்துள்ளது.

தமிழ்த் தலைவர்களுக்கு எதிரான ட்றயல் அற் பார் வழக்கில் அமரர் எம். திருச்செல்வம் நீதிமன்றத்தில் முன்வைத்தசட்டவாதத்தை ஆங்கிலம்,பிரஞ்சு, ஸ்பானிய ஜெர்மன் மற்றும் அரபு மொழிகளில் வெளியிடப் போவதாக அண்மையில் இங்கு வருகை தந்த மேற்படி இயக்கத்தின் தலைவர் திரு. கிருஷ்ணன் அறிவித்துள்ளார். இப்பிரசுரம் ஏற்கனவே இங்கு தமிழில் வெளியிடப்பட்டதும், பிரதிகள் உடன் விற்பனையாகிவிட்ட காரணத்தால் இரண்டாவது பதிப்பையும் வெளியிடவேண்டிய அவசியம் நேர்ந்ததும், சுதந்திரன் வாசகர் அறிந்ததே!

லண்டனில் இருந்து தற்போது ஈழத்துக்கு வருகை தந்துள்ள மேற்படி இயக்கத்தின் தலைவர் கிருஷ்ணன் லண்டன் திரும்பியதும் இந்நூலை உலகமொழிகளில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார். அதன்பொருட்டு அமரர் திருச்செல்வம் ட்றயல் அற் பார் நீதிமன்றத்தில் ஆற்றிய உரையின் தட்டச்சுப் பிரதியை திரு; கிருஷ்ணன் இங்கிருந்து பெற்றுப்போகிறுர்.

---

# தமிழர் திருநாளன்று தந்தை செல்வா நினைவாலய அடிக்கல் நாட்டு விழா

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுக்கூட்டம் புதன்கிழமை காலை 4மணிக்குப் பேராசிரியர் நேசையா தலைமையில், கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.திரு.அ.அமிர்தலிங்கம், திரு. சு. நடராசா திரு. க. சச்சிதானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். பின்வரும் முடிவுகள் அங்கு எடுக்கப்பட்டது.

### அடிக்கல் நாட்டுவிழா

தமிழர்திருநாளானபொங்கல் திருநாளன்று, (14.1.78) சனிக்கிழமை மாலை 4 மணிக்குக் குழுத்தலைவர் பேராசிரியர் நேசையா அவர்கள் அடிக்கல் நாட்டிக் கட்ட[illegible] வேலையைத் தொ[illegible]ங்கிவைப்பார்கள்.இதற்காக,துபாயில் இருந்து விஷேடமாகக் கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜா அவர்கள் இலங்கை வந்துள்ளார்கள். இலங்கையில் உள்ள முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அழைக்கப்படுவார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள்அனைவருக்கும் அழைப்பு அனுப்பப்படும். கிறிஸ்தவ, முஸ்லிம், இந்து சமயாசாரப்படி அருட்பாக்கள்.கீதங்கள்ஓதப்படும்; சமயத் தலைவர்கள் வழிபாடியற்றுகையில் அடிக்கல் நாட்டப்படும்.

### நிதி சேகரிப்பு

அகதிகள் நிதிசேகரிப்புத் [illegible] நிதிசேகரிப்புப் பணியிடைநிறுத்திவைக்கப்பட்டிருந்தது ஜனவரி முதல்வாரத்தில் இருந்து தந்தை செல்வா நினைவுநிதிசேகரிப்புதாமாகச் செயற்படும். இதற்காக பெரிய வர்ணச் சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு எம்பியும் பொறுப்பாக இருந்து நிதிசேகரிப்பில் சடுபடுவார்கள்.

### பத்துலட்சம் தேவை

நினைவாலயம், புலமைப் பரிசில், பயிற்சி முதலாக நினைவுப் பரிசுக்கான பத்து லட்சம் ருபாய்கட்கு மேல் உடனடியாகத் தேவைப்படுகின்றது எனக் குழுப் பொருளாளர் திரு. சி. கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

---

## தமிழ் பத்திரம் இல்லை!

யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புக் கணக்கு திறப்பதற்கான விண்ணப்பப்பத்திரம் தமிழில் இல்லை சிங்களத்திலும்—ஆங்கிலத்திலுமே இப்பத்திரங்கள் இருக்கின்றனவாம்;

இதனுல் பொதுமக்கள் குறிப்பாக சிங்களமோ—ஆங்கிலமோ தெரியாதவர்கள் பெரிதும்கஷ்டப்படுவதோடு, தமிழில் பத்திரம் இல்லாமையால் கணக்குத் திறக்க முடியாமல் இருக்கிறது.

ஆகவே இந்த வங்கியின் மேலிடம் ஆவன செய்ய வேண்டும் என தமிழ் மக்கள் கோருகின்றனர்.

---

## 'நடிகன்' மாத இதழ் மலர்ந்தது!

கலைத்துறையில் புத்துணர்வை ஊட்டும் நோக்கமாக "நடிகன்" என்னும் மாத இழதொன்று புத்தாண்டு அன்று வெளியிடப்பட்டது. ஆசுகவி கல்லடிவேலுப்பிள்ளையின் பேரஞகிய திரு. விஜயேந்திரனை ஆசிரியராக கொண்டு வெளிவந்துள்ள இம்மாத இதழ் தமிழ்ஈழத்தின் கலைவளர்ச்சிக்கு பேருதவி புரியும் நோக்குடன் வெளியிடப்பட்டுள்ளது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதிமிக்க தலைமைப்பீடமே



## போராட்ட வெற்றியின் அடித்தளம்!

### கியூபா புரட்சி விழாவில் அமிர்தலிங்கம் பேச்சு!

"ஒரு நாடு எவ்வளவு தான் பரப்பளவில் சிறியதாக இருந்தாலும் அந்த நாடு கொண்டுள்ள இலட்சியத்தில் அது அடையும் வெற்றிக்கு அடித்தளமாக அமைவது—அந்த நாட்டு மக்களை வழிநடத்திச் செல்லும் தலைமைப்பீடம் கடைப்பிடிக்கும் ஈடாட்டமற்ற உறுதியே! கியூபா சிறிய நாடாக இருந்தாலும், உறுதியான தலைமைப் பீடத்தின் காரணமாக அவர்களது போராட்டம் வெற்றிகாண முடிந்தது. இதை நாம் அனைவரும் மறந்து விடக்கூடாது!"

இவ்வாறு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் 4-1-78ல் நடைபெற்ற கியூபாவின் புரட்சிதின நினைவுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய எதிர்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

மண்டபம் முழுவதும் நிரம்பி வழிந்திருந்த மக்கள் கூட்டத்திடையே திரு. அமிர்தலிங்கம் சிங்கம்போல தனக்கேயுரிய கெம்பீரத்துடன் முதலில் தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் மார்க்சிய லெனினிச புரட்சிக் கருத்துக்களை அள்ளி வீசியபோது, அங்கு குழுமியிருந்த இடதுசாரிக் கருத்துடைய சிங்கள இளைஞர்கள் பலத்த கையொலி எழுப்பி திரு. அமிர்தலிங்கத்தின் கருத்துக்களை வரவேற்ற காட்சி பார்த்தோர் உள்ளங்களை உவகைக்கடலில் தள்ளியது.

கியூபா — இலங்கை நட்புறவுச் சங்கம் ஒழுங்கு செய்திருந்த இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசியதாவது.—

"21 ஆண்டுகளுக்கு முன் உலகத்தையே பிரமிக்க வைக்கத்தக்க போராட்டத்தை நடத்தி புரட்சிகரமான சோசலிச சமுதாயத்தை ஏற்படுத்திய கியூபா மக்களுக்கு தமிழ் தேசிய இனத்தின் சார்பில் எமது வீரவணக்கங்களை தெரிவிக்கின்றேம்.

அடிமைப்பட்ட இனங்கள் உலகில் எங்கெங்கு வாழ்கின்றனவோ. அந்த இனங்களுக்கு கைகொடுக்கும் நாடுகளில் கியூபா இன்று முன்னணியில் திகழ்கின்றது. இன விடுதலை போராட்டங்களுக்கும் ஆதரவு நல்கி வருகிறது இதனை நாம் அங்கோலாவில் காண்கிறேம்.

நாட்டை மற்றேரு நாடு; இனத்தை மற்றேர் இனம் சுரண்டுவதையே அடக்கியாளுவதையோ நாம் அனுமதிக்க முடியாது. கியூபாவில் ஏற்பட்ட சோசலிச புரட்சியை இங்கும் உருவாக்கியே தீருவோம்!

"உதட்டளவில் சோசலிசத்தைப் பற்றி பேசுபவர்களை நான் இன்று காண்கிறேன். ஆனல் புரட்சிகரமான சோசலிச சமுதாயம் ஒன்றை உருவாக்க கார்ல் மார்க்ஸின் விஞ்ஞான சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே முடியும்"

இவ்வாறு திரு, அமிர்தலிங்கம் பேசினர்!

## சிங்களவரையும கவர்ந்த 'அமிரி'ன் ஆற்றல்

முந்தாநாள் எதிர்க்கட்சித்தலைவரும் கூட்டணிச் செயலதிபருமான 'அமிர்தர்' கொழும்பில் நிகழ்த்திய பேச்சைப் பற்றித்தான் பலரும் பேசிக்கொள்கிறர்கள். கியூபாவின் புரட்சி தினத்தையொட்டி புதிய நகரமண்டபத்தில் ஒரு பிரமாண்டமான கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டவர்களில் நூற்றுக்கு தொண்ணூறு வீதமானேர் சிங்கள மக்கள். ஆனல் சிங்களத் தலைவர்களைப் பார்க்கிலும் அமிர்தலிங்கத்தாருக்குத்தான் அதிக கைதட்டல் கிடைத்தது. அமிர்தர் முதலில் தமிழில் ஆரம்பித்து பின்னர் ஆங்கிலத்தில் பேசினர். அவரின் பேச்சை உடனுக்குடன் கம்யூனிஸ்ட் வாலிப இயக்கத்தலைவர் திரு. சரத்முத்தட்டுவேகம சிங்களத்தில் மொழி பெயர்த்தார். அமிர்தர் ஒரு புரட்சிவாதியைப் போலவே பேசினர். தனது இனத்துக்கு ஏற்பட்ட இன்னல்களினல் அவரின் மனம் எவ்வளவு நொந்து போயிருக்கிறது என்பதை அவர் அங்கு வெளிப்படுத்தினர். போலி மார்க்ஸிஸம் வேண்டாம் உண்மை மார்க்ஸியவாதிகளே வேண்டும் என்று சூளுரைத்தார், மனிதன் மனிதனக வாழ, சமத்துவமாக வாழ புரட்சி புரட்சி புரட்சியென்று வீராவேசமாகப் பேசினர். சிங்கள மக்கள் கைதட்டி ஆர்ப்பரித்து அமிர்தரின் பேச்சை வரவேற்ருர்கள். "எவ்வளவு பிரமாதமாகப் பேசுகிருர்" என்று ஒரு சிங்கள பார்வையாளர் வாய்திறந்து சொன்னர். அங்கு அமிர்தரின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த தமிழ் இளைஞர்களுக்கு பெரிய குஷி. "நமது தலைவர் உண்மையிலேயே ஒரு புரட்சித் தலைவர்தான்" என்ருர் ஒரு தமிழ் வாலிபர்!

—வீரகேசரி (6-1-78)

(உள்ளதைச் சொல்வேன் பகுதியில் 'டீயார்')

## ராஜா திரையில்

### தந்தை செல்வா இறுதி ஊர்வலம்

35 இலட்சம் தமிழ் மக்களைத் தாங்கி வழி நடத்திய அந்த முதுபெருங் கிழவர் செல்வா அவர் மறைந்த போது கண்ணீரும் கம்பலையுமாக ஆற்றுவாரும் தோற்றுவாருமின்றி யாழ்ப்பாண மாநகர வீதிகளிலே — குடா நாடு முழுவதுமே சோகமே உருவாக இலட்சோபலட்சம் தமிழ் மக்கள் திரண்ட காட்சி நெஞ்சை விட்டகலாத காட்சியாகும்.

இந்தக் காட்சிகளை மீண்டும் ஒரு முறை நம் கண் முன்னே கொண்டு வருகிறது யாழ், ராஜா தியேட்டரில் இப்பொழுது காட்சி தரும் தந்தை செல்வா இறுதி ஊர்வலத் திரைப்படம் உள்ளத்தை உருக்க வைக்கும் ஊர்வலக்காட்சியும். இறுதிக்கிரியைகளின் முன் தலைவர்கள் இரங்கலுரை நிகழ்த்தும் கட்டமும் தீயோடுதீயாக தியாகப் பெருந்தலைவனின் பூதவுடல் சங்கமமாகும் காட்சியும் கண்களை குளமாக்குகின்றன.

எஸ்.டி. ஆர். அவர்களின் இச்சீரிய திரைப்படப் பணியால், காலாதிகாலம்வரை தமிழனுடைய உணர்ச்சி மங்காமல் இருக்கும் சரித்திரத் தலைவன் செல்வாவின் இறுதிச் சரித்திரம் தமிழன் நெஞ்சில் என்றென்றும் மங்காமல் மறையாமல் இருந்து கொண்டேயிருக்கும். 'கோ'

—1-ம் பக்கத் தொடர்

போராடி அதை முறியடித்து வருகிருர்கள். சிங்கள திணிப்பு எந்தவகையிலும் தமிழ் மாணவர்கள் மத்தியில் நடைபெருதபடி தமிழ் மக்கள் தடுத்து நிறுத்தி வருகிருர்கள்.

இப்போது மீண்டும் ஜே. ஆர். ஆட்சியில் ஏகாதிபத்திய மொழியான சிங்களம். தமிழ் மாணவர்கள் மீது இணைப்பு மொழி மும்மொழித் திட்டம் என்ற பெயரால் திணிக்கப்படுகிறது. இந்த மொழித்திணிப்பை எதிர்த்து முறியடிப்பதற்கு ஈழத்தமிழ் மாணவர்களும் பெற்றேரும் முடிவு செய்துள்ள அதே வேளையில், ஈழத்தமிழ் மக்கள் மீது ஏகாதிபத்திய சிங்களத்தை திணிக்கும் கல்வியமைச்சருக்கு எதிராக வெளிநாடுகளில்— குறிப்பாக இந்தியவிலுள்ள உலகத்தமிழ் பாதுகாப்பு பேரவையு[illegible] லண்டனிலுள்ள தமி[illegible] ஈழ விடுதலை இயக்கமும் முடிவுசெய்துள்ளன. 13-1-78ல் தமிழ் நாடு செல்லும் கல்வியமைச்சருக்கு கறுப்புக் கொடி காட்டப்படலாம்.

## தந்தை செல்வா நினைவாலய விழா நிகழ்ச்சிகள்

தந்தை செல்வா நினைவாலய அடிக்கல் நாட்டு விழா பொங்கலன்று தமிழ் ஈழ நாட்டுப் பண்ணுடன் விழா நிகழ்ச்சிகள் சரியாக நான்கு மணிக்குத் தொடங்குகின்றன. சமயத் தலைவர்கள், சமய நூல்களில் இருந்து போதனை வசனங்களை வாசிப்பார்கள். திருமுறைகள், திருமறைகள் ஆகியவற்றில் இருந்து இசையுடன் கூடிய பாடல்கள் பாடப்படும். அறங்காவல் குழுத் தலைவர் பேராசிரியர் நேசையா அவர்கள், அதைத் தொடர்ந்து அடிக்கல் நாட்டுவார்கள். அடிக்கல் நாட்டுவது பற்றிய விபரங்கள் எழுதப்பட்ட செப்புத்தகட்டுச் சுருள் அடிக்கல் நாட்டும் இடத்தில் வைக்கப்படும். மிழ் இளைஞர்கள் தொண்டர்களாக நின்றுகூட்டத்தைக் கட்டுப்படுத்துவார்கள். பொலிசார் வெளியே போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவார்கள்' நிகழ்ச்சி நடைபெறும் நேரத்தை யொட்டி, ஒருமணி நேரத்துக்குக் காங்கேயன்துறை வீதிப்பகுதியைப் போக்குவரத்துக்கு மூடும்படி பொலிசாரிடம் கேட்கப்பட்டுள்ளது, அடிக்கல் நாட்டியவுடன் பேராசிரியர் நேசையா உரையாற்றுவார்கள். தமிழ் ஈழ நாட்டுப்பண்ணுடன் நிகழ்ச்சி நிறைவு எய்தும்.

வர்த்தகப் பிரமுகர்கள், சட்டத்தரணிகள், பொதுமக்கள், தொழிலாளிகள், 168 பாராளுமன்ற உறுப்பினர்கள், சிங்கள, முஸ்லிம், பறங்கி இன அரசியல் வாதிகள், அரசியல் கட்சிகள், ஜனதிபதி, தந்தை செல்வாவின் உறவினர்கள், நண்பர்கள், தமிழ் நாட்டு அரசியல் பிரமுகர்கள், இலங்கையில் உள்ள வெளி நாட்டுத் தூதுவர்கள், வெளி நாடுகளில் உள்ள தமிழர் இயக்கங்கள் ஆகியோர்க்கு அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

கட்டடக்கலைஞர் திரு. வி.எஸ்.துரைராஜா விஷேஷமாகத் துபாய் நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்து நேரடியாகப் பணிகளைக் கவனிக்கின்ருர், காணியைத் துப்புரவாக்குதல், மண் போட்டு நிரப்புதல், 80 அடி உயரமுள்ள, அதாவது எட்டு அடுக்கு மாளிகையின் உயரமுள்ள நினைவுத்தூண் பல்லாண்டுகள், காலத்தைக் கடந்து நிலைபெறக் கூடிய வகையில் அத்திவாரம் அமைய வேண்டு மாதலால், காணியில் மண்ணில் உள்ள இறுக்கம், அடியில்உள்ள கற்பாறை என்பவற்றைக்காண்பதற்காக, 30 அடி ஆழம் வரை கிடங்கு வெட்டப்பட்டு வருகின்றது. திரு. துரைராஜா அவர்களும், பொறியியல் நிபுணர் திரு. நமசிவாயம் அவர்களும் நேரடியாக நின்று இந்த ஆராய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள [illegible]

தற்கான கேள்விப் பத்திரங்கள் பிரபலஒப்பந்தக்காரர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன. ஜனவரி 12ம் நாளுக்கு முன்பதாகச் சீல்வைத்த கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்குமாறு கட்டடக்காரர் கோரப்பட்டுள்ளனர். தை மாதத்தில் கட்டட வேலை தொடங்கப்படவேண்டும் எனக் குழு அபிப்பிராயப் படுகின்றது.

இப்பணிகளை, எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ.அமிர்தலிங்கம், கோப்பாய் பா,உ. திரு. கதிரவேற்பிள்ளை, முன்னை நாள் செனட்டர் திரு. சு.நடராஜா, க.சச்சிதானந்தன் ஆகியோர் நேரடியாக மேற்பார்வை செய்கின்றனர்.

துரித சேவைக்கு
மில்க்வைற் சலவைப் பவுடரை
வாங்கி உபயோகியுங்கள்

10 மேலுறைகளை அனுப்பி ஒரு அழகிய பொலித்தீன் பாக்கை அல்லது 2 மேலுறைகளுக்கு காந்திக் கலண்டரை பெற்றுக் கொள்ளுங்கள்
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்,

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டாரநாயக்க வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஜனவரி மாதம் 11ம் திகதி புதன் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org